

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று(7.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர் கான் பக்ரீத் திருநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தேனி மாவட்டம் - ‘மகளிர் விடியல் பயணம்’ திட்டம்:

# முதலமைச்சருக்கு மகளிர் நெஞ்சார்ந்த நன்றி !

**சென்னை, ஜீன் 8-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.**

குறிப்பாக பெண்களின் வளர்ச்சி தான் நாட்டின் உண்மையான வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு பெண்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும் செயல்படும் வகையிலும், அவர்களின் வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு, ஆகியவற்றினை உறுதி செய்யும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், இலவச பேருந்து பயண திட்டம், பெண்களின் உயர் கல்வியை ஊக்கப்படுத்தும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.



பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும். படிப்பதற்கு மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடியல் பயணத் திட்டத்தின் மூலம் ஏராளமான பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். பிறரை எதிர்பாராமல் தங்கள் வேலைகளை சுயமாக செய்து கொள்கிறார்கள்.



தனலெட்சுமி

அதனடிப்படையில், கடந்த 4 ஆண்டுகளில் தேனி மாவட்டத்தில் விடியல் பயணத் திட்டத்தில் இதுவரை 32.18 கோடி மகளிர் கட்டணமில்லாமல் பயணங்கள் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர். 14.53 இலட்சம் எண்ணிக்கையிலான மகளிர்கள் கட்டணமில்லாமல் மலை வழித்தட பேருந்து பயணங்கள் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். 2.22 இலட்சம் திருநங்கைகள் மற்றும் 22.33 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணங்கள் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

மேலும், 82 புதிய புறநகர் பேருந்துகள், 13 புதிய நகரப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் தெரிவித்ததாவது.**

**தனலெட்சுமி:** நான் குடும்பத் தலைவியாக உள்ளேன். முன்பெல்லாம் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவது மற்றும் பிற தேவைகளுக்கு வெளியில் செல்வது போன்ற வேலைகளை எனது கணவரே செய்வார்.

ஆனால், மகளிருக்கான இலவச பேருந்து பயணத் திட்டம் தொடங்கியதிலிருந்து எனது கணவரை எதிர்பார்க்காமல் அனைத்து வேலைகளையும் நானே செய்து கொள்கிறேன். இதனால் என் கணவரின் வேலைச் சுமையும் குறைக்கப்பட்டுள்ளது.

எங்களைப்போன்ற ஏழை எளிய மக்களின் நலனுக்காக இத்தகைய சிறப்பானதொரு திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**ஜோதி:** நான் தேனி மாவட்டம் தாடிச்சேரி பகுதியில் வசிக்கிறேன். நான் தற்பொழுது நர்சிங் பயின்று வருகிறேன். தினசரி எங்கள் வீட்டிலிருந்து கல்லூரிக்கு இலவச பேருந்து மூலம் பயணம் செய்கின்றேன். மகளிர் விடியல் பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் என்னைப்போன்று கல்லூரி பயிலும் மாணவிகளின் பேருந்து கட்டணத்திற்கான சுமை குறைக்கப்பட்டுள்ளது. மேலும், நாங்கள் இலவசமாக பயணம் செய்வதால் பேருந்து கட்டணத்திற்கான தொகையை சேமித்து, எங்களின் பிற தேவையை நிறைவேற்றி கொள்ள முடிகிறது. இதுபோன்று சிறப்பானதொரு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.



ஜோதி





வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் புதிய படப்பை மேம்பாலத்தை மக்களவைக் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு முன்னிலையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., படப்பை ஆ.மனோகரன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### எடப்பாடி பழனிச்சாமி தன்னையே விற்று விட்டார்!

## தமிழ்நாட்டு மக்கள் பழனிச்சாமியின் துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்!

### நாடாளுமன்றக் கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கடும் கண்டனம்!

சென்னை, ஜீன் 8-

“நீங்கள் உங்களையே விற்றுவிட்டீர்கள் நாங்கள் அப்படி அல்ல! என்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தமது வலைதளத்தில் எடப்பாடி பழனிச்சாமிக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி.யின் வலைதளப் பதிவு வருமாறு :

தமிழக மக்கள் உங்கள் துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

தங்கள் சொந்த மாநில நலன்களை கைவிட்டு, தனிப்பட்ட அரசியல் பிழைப்புக்காக டெல்லி எஜமானர்களுக்கு பணிந்து நடப்பவர்கள் எங்களுக்குப் போதித்திட எந்த உரிமையும் இல்லை.

தமிழ்நாட்டின் எதிர்காலத்துடன் விளையாடுபவர்களை - நமது விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களை அழிப்பவர்களை நீங்கள் பாதுகாக்கிறீர்கள்.

அச்சுறுத்தல் நம்முடைய வீட்டு வாசலில் நிற்கிறது. உங்கள் டெல்லி எஜமானர்களின் பொய்கள் தமிழ்நாட்டில் எடுபடாது என்று அவர்களிடம் சொல்லுங்கள். எழுதப்பட்ட, தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் தீர்வைத் தவிர வேறு எதையும் நாங்கள் விரும்பவில்லை.

அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதங்கள் கிடைக்கும் வரை நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம். உரத்த குரல் எழுப்புவோம்.

நீங்கள் உங்களையே விற்றுவிட்டீர்கள். நாங்கள் அப்படி அல்ல!

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.